## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று / தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை.

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

----------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

--------------------------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம்

செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிதியத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நியமம் 03 இன் பிரகாரம் அதிகாரசபையினால் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும், பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 28,532,499 தொகையான வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் 2018 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் மீள்மதிப்பு செம்மையாக்கல் மேற்கொள்ளப்படுகின்றது என்பதைத் தெரிவிக்கின்றேன். | மீள்மதிப்பு அறிக்கையினைப் பெற்றுக் கொண்டு நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான ரூபா 6,649,194 தொகையான வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா 1,861,775 தொகையான வரிப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அப்பெறுமதியால் இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததானது வங்கியிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வட்டியாக எழுத்து மூலம் தெரியப்படுத்திய பணமாகும். அது வங்கி குறிப்பிட்ட வட்டி பணத்திலிருந்து இந்த ஐய வினாவிற்கு இணங்க வங்கியிடம் இது தொடர்பாக விசாரித்து கணக்கீடு செய்யப்பட்ட வட்டி சரியான வட்டியாக இல்லை என்றால் | வட்டி வருமானத்தின் அடிப்படையில் வட்டியைக் கணித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும். |

2019 ஆம் ஆண்டில் தேவையான செம்மையாக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கிறேன். வரிப் பணத்தை கழித்ததன் பின்னரான பெறுமதி என்ற அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கின்றேன்.

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப் படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| நானாவித இருப்பு | 8,600,639 | மெய்மையாய்வு அறிக்கை | ரூபா 8,600,639 தொகையான நானாவித இருப்பு மீதி இந்த ஆண்டிற்கான ஆரம்ப மீதியானதுடன் அந்த மீதிக்கான இருப்பு விடயங்களின் பிரகாரம் பகுப்பாய்வு ரீதியான அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். மேலும், காணப்படுகின்ற இனங்காணப்படாத மீதிகளை சரியாக கணக்கிணக்கம் செய்து சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். | ஆண்டின் இறுதியில் காணப்பட்ட இருப்புக்களுக்காக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவு | அதிகார சபையினால் தோற்றுவிக்கப்பட்ட விளையாட்டு மற்றும் கலாசார பிரிவிற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 09 முகாமைத்துவ உதவியாளர்கள் சேர்த்துக் | 2018 ஆம் ஆண்டிற்காக பெருந்தோட்ட விளையாட்டு விழாக்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக ஈடுபடுத்துவதற்கு நிறுவனத்தின் ஊழியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதனால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அனுபவமுள்ள ஊழியர்கள் | சுற்றறிக்கை யிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்ளப்பட்டு நாளாந்த சம்பள அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | அதற்காக தற்காலிக அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் உரிய நிகழ்ச்சித் திட்டம் முடிவடைகையில் அவர்களின் சேவையையும் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச் சட்டத்தின் (1)(அ) உப பிரிவு | ஒப்பந்த உடன்படிக்கையில் கிரயம் ரூபா ஐம்பது இலட்சத்தை மிகைக்கும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு கேள்விதாரரும் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டிய போதிலும், அவ்வாறு பதிவு செய்யப்படாத கேள்விதாரருக்கு ரூபா 9,218,635 தொகையான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | உரிய ஒப்பந்த செயற்பாடு சம்பந்தமாக ஒப்பந்தக்காரர் மற்றும் இந்த அதிகாரசபையின் உடன்படிக்கை செய்வதற்குரிய நிபந்தனைகள், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (ICTAD/SBD/01-2/Edition January 2007) நிபந்தனை மற்றும் அதில் மேற்கொண்ட திருத்தங்களின் அடிப்படையில் கேள்விதாரர்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதனால் அதனை அனுசரித்து கேள்விதாரர்களினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்த கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகளைக் கோருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 62,748,445 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 129,533,198 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 66,784,753 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மானியம் அதிகரித்தல் மற்றும் அது தொடர்பான செலவுகள் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நான்கு பிராந்திய அலுவலகத்தில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 71,856,901 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அக்கட்டிடங்களின் சட்டரீதியான உரிமை அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்திற்குச் சொந்தமாக 49 காணிகள் காணப்படுவதுடன் அவற்றில் 5 காணிகளுக்காக மாத்திரம் சட்டரீதியான உரிமை அதிகாரசபையிடம் காணப்பட்டதுடன் இது சம்பந்தமாக முழுமையாக பகுப்பாய்வு செய்து மிகுதியாக உள்ள 46 காணிகள் மற்றும் கட்டிடங்களை அதிகாரசபையினால் சட்டரீதியாக பொறுப்பேற்பதற்காக உரிய நிறுவனம் வரிசை அமைச்சுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. என தெரிவிக்கிறேன். | சட்டரீதியான உரிமையை அதிகார சபையினால் பொறுப்பேற்காத காணிகளின் உரிமையைப் பொறுப்பேற்றல். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ஐந்து கட்டங்களில் தேயிலை மீள் பயிர்ச்செய்கை நிவாரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட பணத்தில் முதல் 3 கட்டங்களுக்காக மாத்திரம் ரூபா 920,127,271 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 577 ஹெக்டேயர் உரிமையுள்ள விவசாயிகள் மிகுதி நிவாரணங்களைப் பெற்றுக் கொண்டு தேயிலைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை | புனரமைப்புச் செய்யப்பட்ட காணிகளை ஏனைய பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தியுள்ள விவசாயிகளிடமிருந்து இதுவரை அவர்களுக்குச் செலுத்தியுள்ள நிவாரணப் பணத்தை மீள அறவீடு செய்யும் நடைமுறை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருவதுடன் இந்த உத்திரவுப் பத்திரம் வழங்கப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள் இந்த நாற்றுக்கள் நடுகை செய்கின்ற செயற்பாட்டை பூர்த்தி செய்து கொள்வதற்கு பொறுப்பாக உள்ளனர். | நிவாரணப் பணத்தை பெற்றுக் கொண்டு தேயிலை மீள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளைச் செய்யாத விவசாயிகளின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முழுமைப் படுத்துவதற்கு ஊக்குவித்தல் மற்றும் முறைமையிலுள்ள பலவீனங்களை இனங்கண்டு முறைமையை மேம்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காமையால் அந்த நிவாரணங்களை வழங்குவதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் அது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ஆ) | விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக முன்னைய ஆண்டில் செலவு செய்த பணம் ரூபா 16,561,557 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அது ரூபா 32,360,151 வரை அதிகரித்திருந்தும் பங்குபற்றிய விவசாயிகளின் எண்ணிக்கை 12,363 ஆல் குறைவடைந்திருந்தது. | விஸ்தரிப்பு செலவானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் போது உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்ததானது முன்னைய ஆண்டின் போது விவசாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காரணத்திலாகும். 2018 ஆம் ஆண்டின் போது விவசாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தை முறைப்படியாக பயன்படுத்துவது சம்பந்தமாக தீவிர கண்காணிப்பு நடாத்தப்பட்டதும் அதற்கு மேலதிகமாக விவசாயிகளுக்கு மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தல் நடவடிக்கைகளின் மூலம் அதிக பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்ததனாலும் அதற்காக பாதீட்டின் மூலம் அதிக நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்நடவடிக்கைகளுக்காக செலவு செய்ததன் மூலம் மிகவும் வினைத்திறனாக விவசாயிகளுக்கு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் காரணம் எனக் குறிப்பிடுகின்றேன். | அரசாங்கத்தின் பணத்தை சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் வினைத்திறனாக உரிய குறிக்கோள்களுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நிதிகளின் குறைந்த பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பசளை நிவாரணங்களைச் செலுத்துவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தில் ரூபா 13,466,664 தொகை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பசளை நிறுவனத்திற்காக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,700 மில்லியன் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் முழுவதும் முறையான நடைமுறைகளுக்கு இணங்க தகைமை பெற்ற 347,106 விவசாயிகளுக்கு மத்தியில் சரியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் இவ்விவசாயிகளின் கணக்குகள் செயற்பாடற்றிருந்தன. கணக்கு இலக்கங்களின் குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டமை, உரிமையாளர்கள் அக்கணக்கிற்குரிய இடங்களில் இல்லாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணம் அவர்களின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாதிருந்தது. இதன் காரணமாக எஞ்சியுள்ள அப்பணம் இதில் காட்டப்பட்டுள்ளது. | நிவாரணப் பணத்தை எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் நிவாரணத்திற்கு தகைமையுள்ள விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பயன்படுத்தப்படாத பணத்தை மீள திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வெள்ள நிவாரண ஊக்குவிப்பு படிகளாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 46,991,226 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மிகுதியாக உள்ள ரூபா 145.9 மில்லியனில் ரூபா 100 மில்லியன் மீண்டும் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பின்னர் மிகுதியாகவுள்ள ரூபா 45.99 மில்லியனும் உரிமை கோரப்படாததன் அடிப்படையில் நிவாரணம் நிராகரிக்கப்பட்டதன் பேரில் வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 1.09 மில்லியன் தொகையையும் உள்ளடக்கிய முழு மீதியாக ரூபா 46,991,226 தொகை மேலும் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தியதன் பின்னர் எஞ்சியுள்ள பணத்தை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |

## 3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ரூபா 1,575,000 கிரயமான கெப் வாகனம் 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி ஒரு தனியார் கராஜிற்கு பழுதுபார்ப்பதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த கெப் வாகனம் பழுதுபார்க்கப்பட்டு இன்றுவரை திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | 52-2605 ஆம் இலக்க வாகனம் முறைப்படியாக பெறுகை நடைமுறைகளினூடாக பழுதுபார்ப்பதற்காக நாவலப்பிட்டி ஓட்டோ கெயா நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அவர்களின் மதிப்பீட்டுப் பணம் ரூபா 585,000 ஆகும். இந்த வாகனத்தின் பழுதுபார்த்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர் கராஜ்காரரினால் மேலும் இதில் செய்ய வேண்டியுள்ள பழுதுபார்த்தல்கள் தொடர்பாக எங்களுக்கு தெரியப்படுத்தியிருந்தார். இது தொடர்பாக தொழில்நுட்ப பொறியியலாளரின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அவரின் ஆலோசனையானது இந்த வாகனத்தை பழுதுபார்த்து செயற்பாட்டில் ஈடுபடுத்துவதானது விளைவற்றது என்பதாகும். | வாகனங்களை நிருவகிப்பது சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் விளைதிறனாக வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| இயற்கையாக ஏற்படுகின்ற விளைச்சல் பாதிப்புக்களுக்காக அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக நிவாரணம் வழங்க வேண்டி ஏற்படும் சிக்கல்களுக்கு பரிகாரமாக இயற்கை அழிவுக் காப்புறுதி முறைமையை பிரசித்தப்படுத்துவதற்காக ரூபா 1,000,563 செலவு செய்து பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியளவில் இந்நிகழ்ச்சித்திட்டம் | சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தொடர்ச்சியாக முகங்கொடுக்கின்ற காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களால் ஏற்படுகின்ற பயிர் மற்றும் பணரீதியான நட்டங்களுக்காக அரசாங்கத்தால் பெருந்தொகைப் பணத்தை செலவு செய்ய நேரிடுவதனால் இந்த விவசாயிகளை காப்புறுதி முறைமைக்கு உள்ளடக்குவதற்காக | செயற் திட்டத்திற்காக செலவு செய்வதற்கு முன்னர் அதனை நிறைவேற்றக் கூடிய இயலுமை தொடர்பாக சாத்திய வள ஆய்வினைச் செய்வதற்கும் இலக்கினை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் திட்டங்களைத் |

| | | |
|---|---|---|
| கைவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் செயற்பட்டதுடன் தொடக்க நடவடிக்கை மிகவும் சரியாக இடம்பெற்றிருந்தும் அதில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததனால் செயற்திட்டத்தை கைவிட வேண்டி ஏற்பட்டது எனத் தெரிவிக்கின்றேன். | தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |